NSW GOVERNMENT | Health

Tamil
[DOH-8105]

# பிந்தீஸ் மணிகள் காரணமாக ஏற்படும் மாசுபடல் (Contamination of Bindeez ™ beads)

## பிந்தீஸ் மணிகளில் என்ன பிரச்சினை?

பாதுகாப்பான இரசாயணப் பொருளுக்குப் பதிலாக நச்சுத் தன்மையுடைய இரசாயணப் பொருள் ஒன்று இந்த (beads எனப்படும்) மணிகளில் பயன்படுத்தப்பட்டிருப்பது போல் தெரிகிறது. இதை விழுங்கும் பொழுது இந்த இரசாயணப் பொருள் உடலில் GHB என்ற வஸ்துவாக மாறுகிறது.

## GHB என்றால் என்ன?

GHB (gamma hydroxyl butyrate) என்பது மயக்கநிலையையும், உணர்விழப்பினையும் ஏற்படுத்தும் சக்தி வாய்ந்த வஸ்துவாகும்.

## GHB யால் ஒரு குழந்தை பாதிக்கப்பட்டுள்ளதா என்பதைக் காட்டும் அடையாளங்கள் என்ன?

எத்தனை மணிகள் விழுங்கப்பட்டுள்ளன என்பதைப் பொருத்து பாதிப்பிற்கான அறிகுறிகள் வேறுபடும்.

சிறு அளவில் பாதிக்கப்பட்ட குழந்தை சிறிது மயக்க நிலையிலோ அல்லது கூச்சம் நீங்கிய கட்டுப்பாடற்ற நிலையிலோ காணப்படலாம். அதிக அளவு இரசாயணப் பொருளை உட்கொண்ட குழந்தைகளுக்கு வாந்தி மயக்கம், தலை சுற்றல், குளறிய பேச்சு, கடும் தூக்கத்துக்குப் போகும் நிலை ஆகியவை ஏற்படலாம், மற்றும் கை கால் வலிப்பும் வரலாம்.

எல்லா அறிகுறிகளும் சிலபல மணி நேரத்திற்குள் தீர்ந்துவிட வேண்டும்.

## என் குழந்தையிடம் GHB தாக்கத்துக்கான அறிகுறிகள் காணப்பட்டால் நான் செய்ய வேண்டியது என்ன?

ஓரளவுக்கே பாதிக்கப்பட்ட குழந்தைகளை பொது மருத்துவரிடமோ அல்லது உள்ளூர் மருத்துவமனைக்கோ

அழைத்துச் செல்லுங்கள். மிகவும் தீவிரமான அறிகுறிகள் இருந்தால் அவசர சிகிச்சை வண்டியை அழையுங்கள்.

வாந்தியெடுத்தலைப் பெற்றோர்கள் தூண்டக் கூடாது.

## பிந்தீஸ் மணிகளுடன் குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்தால் பெற்றோர்கள் என்ன செய்வது?

குழந்தைகளிடமிருந்து மணிகளை அகற்றி அவற்றை அவர்களது கைக்கெட்டாத தூரத்தில் வையுங்கள். எந்த மணிகளையும் விழுங்காத குழந்தைகளுக்கும், மயக்க நிலைக்கான அறிகுறிகள் இல்லாத குழந்தைகளுக்கும் பாதிப்பு ஏற்படும் வாய்ப்பு குறைவு. இக்குழந்தைகளை வீட்டில் வைத்தே கவனித்துக் கொள்ளலாம் - ஒரு மணி நேரத்திற்குள் பாதிப்பிற்கான அறிகுறிகள் ஏற்படாவிட்டால் அவர்கள் பாதிக்கப்பட்டிருப்பதற்கான வாய்ப்புக் குறைவு.

மணிகளை அல்லது மணி வேலைப்பாடுகளைத் (beads or mosaic) தொடுவது மட்டும் உடல் நலக் கேடுகளை விளைவிக்கும் என்று கருதப்படுவதில்லை.

## பிந்தீஸ் மணிகளை நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

பிந்தீஸ் மணிகளைக் குழந்தைகளிடமிருந்து அகற்றி அவற்றைக் குழந்தைகளின் கைக்கெட்டா இடத்தில் வைக்க வேண்டும். பிந்தீஸ் மணித் தயாரிப்பாளரது வலைப்பக்கத்தில் (http://www.mooseworld.com.au/content/bindeezrecall/faq.aspx )உள்ள தகவல்களின்படி மணிகளை விற்பனையாளரிடம் திருப்பித் தர வேண்டும் அல்லது மூஸ் வர்த்தகத்திற்கு 1800 303 895 என்ற தொலைபேசி எண் மூலம் தெரிவிக்க வேண்டும்.

உடல் நலக் கேடுகள் குறித்த (about health effects) மேலதிகத் தகவல்களுக்காக **விஷங்கள்-தகவல் மையத்துடன்** 131 126 மூலம் தொடர்பு கொள்ளுங்கள் அல்லது உங்களது உள்ளூர் பொது சுகாதாரப் பிரிவினரை அழையுங்கள்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Camperdown | 02 9515 9420 | Penrith | 02 4734 2022 | Broken Hill | 08 8080 1499 | Newcastle | 02 4924 6477 |
| Gosford | 02 4349 4845 | Randwick | 02 9382 8333 | Dubbo | 02 6841 5569 | Port Macquarie | 02 6588 2750 |
| Hornsby | 02 9477 9400 | Albury | 02 6080 8900 | Goulburn | 02 4824 1837 | Tamworth | 02 6767 8630 |
| Parramatta | 02 9840 3603 | Bathurst | 02 6339 5601 | Lismore | 02 6620 7500 | Wollongong | 02 4221 6700 |

**அவசர மருத்துவ உதவிக்கு 000 வை தொலைபேசி மூலம் அழையுங்கள்**